தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பொதுப்பணி - இளநிலை வணிகவியல் பட்டம் (B.Com.,) பெறாமல் முதுநிலை வணிகவியல் பெற்ற பட்டத்தை (M.Com.,) கணக்கியலில் கீழ் நிலை / மேல்நிலைப் படிப்பிற்கு (Lower / Higher Grade Accountancy) இணையாகக் கருதி அங்கீகாரம் அளித்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசு ஆணை நிலை எண். 215 நாள் : 31.08.1998.

படிக்கப்பட்டது :

1. அரசு ஆணை நிலை எண். 441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் :20.12.93.
2. தமிழ்நாடு மின்வாரிய செயலரது கடித எண்.7601/Admn./A.2/91, நாள் : 29.11.1994.
3. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரது கடித எண்.6190/PD-D.3/93, நாள் : 19.01.1995.
4. அரசு கடித எண். 7721/95-4, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் : 27.09.1995
5. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரது கடித எண். 1095/RND-A.5/96, நாள் : 24.04.1998.

------------

ஆணை :-

தமிழ்நாடு மின்வாரியச் செயலர், மின்வாரியத்திலுள்ள தணிக்கை அலுவலர் (Auditor) மற்றும் உதவி தணிக்கை அலுவலர் (Assistant Audit Officer) ஆகிய பதவிகளுக்கு முன் ஊதிய உயர்வு / பதவி உயர்வு வழங்க கணக்கியல் கீழ்நிலை / மேல்நிலை தேர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என தமிழ்நாடு மின்வாரிய விதிகளில் உள்ளன எனவும், இளநிலை வணிகவியல் பட்டம் பெற்றவர்களுக்கு மேற்காணும் விதிகளிலிருந்து விலக்களித்துவருவதாகவும், தற்போது திரு. வி. கண்ணன் என்பவர், இளநிலை வணிகவியல் (B.Com.,) பட்டம் பெறாமல் முதுநிலை வணிகவியல் பட்டம் பெற்றுள்ளதாகவும், எனவே, கணக்கியலில் கீழ்நிலை / மேல்நிலைக்குச் சமமாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தால் வணிகவியல் பட்டப்படிப்பு (B.Com.,) இல்லாமல் நேரடியாகப் பெறப்படும் முதுநிலை வணிகவியல் பட்டப்படிப்பிற்கு நிகரானதாகக் கருதலாமா எனத் தெளிவுரை வழங்குமாறு பார்வை இரண்டில் குறிப்பிடப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுள்ளார். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் திரு.வி. கண்ணன், 1986-87 –ம்

ஆண்டில் இளங்கலை வணிக நிர்வாகம் (B.B.A.,) பெற்ற பின்னர்தான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதுநிலை வணிகவியல் பட்டம் பெற்றுள்ளதாகவும், மின்வாரியச் செயலர் பின்னர் தெரிவித்துள்ளார். மின்வாரியச் செயலரது கோரிக்கை அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் : 20.12.1993-ல் இதற்கென அமைக்கப்பட்ட குழுவின்முன்னர் பரிந்துரைக்காக வைக்குமாறு அரசால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

2, 14.12.96 மற்றும் 20.03.98 ஆகிய தேதிகளில் நடந்த குழுக் கூட்டங்களில் இப்பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு, இளங்கலை வணிக நிர்வாகப் பட்டப்படிப்பு (B.B.A.) பயின்றபின்னர் வழங்கப்படும் முதுநிலை வணிகவியல் பட்டப்படிப்பை (M.Com.,) கணக்கியலில் கீழ்நிலை / மேல்நிலை (Lower / Higher Grade Accountancy) படிப்பிற்கு நிகரானதாகக் கருதி பதவி உயர்வு மற்றும் முன் ஊதிய உயர்வு ஆகியவற்றிற்கு ஏற்கலாம் எனக் குழு, அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

3. இக்குழுவின் பரிந்துரைகளைத் தீவிரப் பரிசீலனை செய்தபின் ஏற்றுக்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, இளங்கலை வணிக நிர்வாகத்தில் (B.B.A.) பட்டம் பெற்ற பின்னர் பெறப்படும் முதுநிலை வணிகவியல் பட்டத்தை (M.Com.,) கணக்கியலில் கீழ்நிலை / மேல்நிலை (Lower / Higher Grade in Accountancy) படிப்பிற்கு இணையானதாகக் கருதி பதவி உயர்வு மற்றும் முன் ஊதிய உயர்வு பெற அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. பிரகாஷ்,
அரசு செயலர்

பெறுநர்

அனைத்து செயலர்கள், சென்னை – 9.
அனைத்து துறைத் தலைமை அலுவலர்கள்,
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை -2.
செயலர், தமிழ்நாடு மின்வாரியம், சென்னை – 2.

நகல் :-

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அனைத்துப் பிரிவுகள். சென்னை –9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்